செ.வெ.எண்: 172 நாள்: 10.03.2020

# மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கும் முகாம் 18.03.2020 வரை நடைபெறுகிறது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தகவல்

தஞ்சாவூர் மாவட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கும் முகாம் 18.03.2020 வரை நடைபெறுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது :-

நாடு முழுவதும் மாற்றுத்திறனாளிகள் பற்றிய புள்ளிவிவரங்களை சேகரிக்கவும், மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்கள் பற்றிய விவரங்களை எளிதில் கொண்டு செல்லவும் மத்திய அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை ( Unique Disability Identity Card - UDID Card ) வழங்கும் திட்டம் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டு நடைமுறையில் உள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கும் முகாம் கடந்த 18.02.2020 அன்று தொடங்கி தற்போது நடைபெற்று வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், அனைத்து சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக தரைதளத்தில் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் ஆகிய இடங்களில் அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் இம்முகாமில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் இரண்டு பாஸ்போர்ட் சைஸ் வண்ண புகைப்படங்கள்

மற்றும் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, நிரந்தர கணக்கு எண் அட்டை ஆகியவற்றின் தெளிவான நகல்களுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். ஏற்கனவே இணையதளம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பித்த மாற்றுத்திறனாளிகள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை. மாற்றுத்திறனாளிகள் நேரில் வர இயலவில்லை எனில், மாற்றுத்திறனாளியின் கையொப்பம் அல்லது கைரேகை பெற்ற பாதுகாவலர் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி விண்ணப்பித்து, மாற்றுத்திறனாளிகளுக்கான மத்திய அரசின் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையை பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.